பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை

26 02 2025 **WEDNESDAY** **7.15 PM**

ஆகாஷ்வாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பெண்களின் வளர்ச்சியே நாட்டின் வளர்ச்சியை தீர்மானிக்கும் என்று குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

2. எதிர்கால எரிசக்தி தேவையை பூர்த்தி செய்வதில் பசுமை ஹைட்ரஜன் முக்கிய பங்கு வகிக்கும் என்று பெட்ரோலியத்துறை அமைச்சர் திரு ஹர்தீப் சிங் புரி கூறியுள்ளார்.

3. உலகின் மிகப்பெரிய ஆன்மிக திருவிழாவான மகா கும்பமேளா இன்று நிறைவடைகிறது.

4. பீகார் அமைச்சரவை விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது, ஏழு அமைச்சர்கள் பதவியேற்றனர்.

5. தெற்காசிய மகளிர் கூடைப்பந்து சாம்பியன் போட்டியில் இந்தியா – மாலத்தீவு இடையேயான இறுதியாட்டம் தற்போது புதுதில்லியில் நடைபெற்று வருகிறது.

<u>இனி விரிவான செய்திகள் ---</u>

<<<<<<>>>>>>

பெண்களின் வளர்ச்சியே நாட்டின் வளர்ச்சியை தீர்மானிக்கும் என்று குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு கூறியுள்ளார்.

மத்தியப்பிரதேசத்தின் **Chhatarpur** மாவட்டத்தில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், மகளிர் கல்வி, சுகாதாரம் மற்றும் பாதுகாப்பிற்கு கூடுதல் கவனம் செலுத்தப்பட வேண்டும் என்றார்.

வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்க வேண்டும் என்பதில் மத்திய அரசு உறுதியுடன் உள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இதனை எட்டுவதற்கு அனைத்துத் தரப்பினரும் பங்களிக்க வேண்டும் என்றும், அவர்களின் வளர்ச்சி உறுதி செய்யப்பட வேண்டும் என்றும் திருமதி திரௌபதி முர்மு கூறினார்.

<<<<<<>>>>>>

இந்தியா வலிமையான நாடாக உருவெடுத்துள்ளதாக குடியரசு துணைத்தலைவர் திரு ஜெக்தீப் தங்கர் கூறியுள்ளார்.

அருணாச்சலப்பிரதேசத்தின் **Kamle** மாவட்டத்துக்கு உட்பட்ட பகுதியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்துகொண்டு அவர் பேசினார்.

அருணாச்சலப்பிரதேசத்தில் இதுவரை இல்லாத அளவிற்கு வளர்ச்சித் திட்டப்பணிகள் நிறைவேற்றப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

சாலை, ரயில், விமான போக்குவரத்து மற்றும் கைபேசி சேவை அம்மாநிலத்தில் தொடர்ந்து விரிவடைந்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

முதலீட்டிற்கான ஏராளமான வாய்ப்புகள் அருணாச்சலப்பிரதேசத்தில் உள்ளதாகவும் திரு ஜெக்தீப் தங்கர் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

எதிர்கால எரிசக்தி தேவையை பூர்த்தி செய்வதில் பசுமை ஹைட்ரஜன் முக்கிய பங்கு வகிக்கும் என்று பெட்ரோலியத்துறை அமைச்சர் திரு ஹர்தீப் சிங் புரி கூறியுள்ளார்.

குவஹாத்தியில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், எரிசக்தி பாதுகாப்பை உறுதி செய்வதில் அஸ்ஸாம் முக்கிய பங்கு வகிக்கும் என்று குறிப்பிட்டார்.

புதுப்பிக்கத்தக்க எரிசக்தி பயன்பாட்டிற்கு மத்திய அரச ஊக்கம் அளித்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

பெட்ரோலுடன், எத்தனாலை கலப்பதற்கான இலக்குகள் முன்கூட்டியே எட்டப்படுவதாகவும் அவர் கூறினார்.

உயிரி எரிபொருள் தொடர்பான ஆராய்ச்சிப்பிரிவு ஒன்று அஸ்ஸாமில் ஏற்படுத்தப்படும் என்றும் திரு ஹர்தீப் சிங் புரி அறிவித்தார்.

<<<<<<>>>>>>

கல்வி உதவித்தொகை திட்டத்திற்கான பயனாளிகள் குறைக்கப்பட்டதாக காங்கிரஸ் தலைவர் திரு மல்லிகார்ஜுன கார்கே கூறியுள்ளது தவறானது என்று மத்திய சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் திரு கிரண் ரிஜிஜு கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், சிறுபான்மையினர் நலனுக்காக இதுவரை இல்லாத அளவிற்கு மத்திய அரசு திட்டங்களை செயல்படுத்தி வருவதாக தெரிவித்தர்.

கல்வித் உதவித்தொகை திட்டங்கள் வெளிப்படைத்தன்மையுடன் நடைபெற்று வருவதாகவும் பயனாளிகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் திரு கிரண் ரிஜிஜு தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

தேசிய விளையாட்டு அமைப்புகளுக்கு நிதியுதவி வழங்குவதற்கான நெறிமுறைகளை மாற்றியமைப்பதற்கென ஆறு பேர் கொண்ட குழுவை மத்திய அரசு ஏற்படுத்தியுள்ளது.

விளையாட்டுத்துறை இணைச்செயலர் திரு குணால் தலைமையிலான இந்த குழு, 15 நாட்களுக்குள் அறிக்கை தாக்கல் செய்யுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

<<<<<<>>>>>>

பீகாரில் அமைச்சரவை விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது.

இதன்படி, பிஜேபி - ஐக்கிய ஜனதாதள் கூட்டணி அமைச்சரவையில் ஏழு அமைச்சர்கள் புதிதாக சேர்க்கப்பட்டுள்ளனர்.

பாட்னாவில் நடைபெற்ற நிகழ்ச்சியில் ஆளுநர் திரு **Arif Mohammed Khan,** புதிய அமைச்சர்களுக்கு பதவி பிரமாணம் செய்துவைத்தார்.

பதவியேற்ற ஏழு அமைச்சர்களும் பிஜேபி-யை சேர்ந்தவர்கள் என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

முன்னதாக, பிஜேபி மாநிலத்தலைவர் திரு திலிப் ஜெய்ஷ்வால், தமது அமைச்சர் பதவியை ராஜினாமா செய்தார்.

ஒரு நபருக்கு – ஒரு பதவி என்ற பிஜேபி-யின் கொள்கைப்படி, அமைச்சர் பதவியை ராஜினாமா செய்துள்ளதாக அவர் கூறினார்.

**<<<<<<>>>>>>**

இனி மகா கும்பமேளா குறித்த செய்திகள் . . .

*(சவுண்ட் பைட் - **Song** - 8 நொடிகள்)*

உத்தரப்பிரதேசத்தின் பிரயாக்ராஜில் நடைபெற்றுவரும் உலகின் மிகப்பெரிய ஆன்மிக திருவிழாவான மகா கும்பமேளா இன்றுடன் நிறைவடைகிறது.

இதனையொட்டி, விமானப்படையின் சாகச நிகழ்ச்சியும் நடைபெற்றது.

திரிசூல வடிவில் விமானங்கள் பறந்து சென்றது பார்வையாளர்களை மெய்சிலிர்க்க வைத்தது.

*(சவுண்ட் பைட் - விமானம் பறக்கும் காட்சி – 12 செகண்ட்ஸ்)*

இன்று பிற்பகல் வரை மட்டும் ஒரு கோடிக்கும் மேற்பட்டோர் புனித நீராடியுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

பக்தர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதால் அவர்களுக்கு எவ்வித சிரமமும் ஏற்படால் இருப்பதை உறுதி செய்வதற்காக மத்திய அரசோடு இணைந்து உத்தரப்பிரதேச அரசு விரிவான ஏற்பாடுகளை செய்துள்ளது.

மகா கும்பமேளாவிற்காக சிறப்பு ரயில்களும் தொடர்ந்து இயக்கப்பட்டு வந்தன.

இதுதொடர்பாக ரயில்வே அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ், இன்று புதுதில்லியில் அதற்கான கட்டுப்பாட்டு அறையில் ஆய்வு மேற்கொண்டார்.

சிறப்பு ரயில்கள் முறையாக இயக்கப்படுகிறதா என்பது குறித்து அமைச்சர் அதிகாரிகளிடம் கேட்டறிந்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(சவுண்ட் பைட் - **Song** - 8 நொடிகள்)*

<<<<<<>>>>>>

தெலங்கானா முதலமைச்சர் திரு ரேவந்த் ரெட்டி, பிரதமர் திரு நரேந்திர மோடி-யை புதுதில்லியில் இன்று சந்தித்து பேசினார்.

அம்மாநிலத்தின் வளர்ச்சித் திட்டப்பணிகள் குறித்து இந்த சந்திப்பின்போது விவாதிக்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<>>>>>>

நாடு முழுவதும் 60-க்கும் மேற்பட்ட இடங்களில் சிபிஐ சோதனை நடத்தியது.

இதில் 24 கோடி ரூபாய் மதிப்பிலான கிரிப்டோ கரன்சி பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக சிபிஐ-யின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

34 லேப்டாப், 12 மொபைல்போன் மற்றும் ஏராளமான ஆவணங்களும் பறிமுதல் செய்யப்பட்டிருப்பதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தில்லி, புனே, பெங்களுரு, சண்டிகர், ஜான்சி உள்ளிட்ட இடங்கள் இதில் அடங்கும் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

சென்னை அகில இந்திய வானொலியின் மாநில செய்திப்பிரிவு வழங்கும் ‘செய்திச்சுடர்’ நிகழ்ச்சியில், ‘பெண் குழந்தைகளை காப்போம் - அவர்களுக்கு கல்வி கற்பிப்போம்’ குறித்து மூத்த பத்திரிகையாளர் திரு. வெங்கடேஷுடன் எமது நெறியாளர் சுமித்ரா ரத்னம் பங்கேற்ற நேர்காணலின் இரண்டாவது பகுதி இன்று இடம் பெறுகிறது.

ஒருங்கிணைந்த அலைவரிசையில் இரவு மணி 9.15-க்கு ஒலிபரப்பாகும் இந்த நிகழ்ச்சியை மாநிலத்தில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் அஞ்சல் செய்யும்.

<<<<<<>>>>>>

சூடானில் ராணுவ விமானம் ஒன்று விபத்துக்குள்ளானதில், உயிரிழந்தோர் எண்ணிக்கை 46-ஆக அதிகரித்துள்ளது.

**‘Wadi Sayidna ’** விமான தளத்திலிருந்து புறப்பட்டபோது இந்த விமானம், விபத்துக்குள்ளானதாக அந்நாட்டு ராணுவம் தெரிவித்துள்ளது.

தொழில்நுட்ப கோளாறே இந்த விபத்துக்கு காரணம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விபத்தில் ராணுவப்படையினரும், பொதுமக்களும் உயிரிழந்திருப்பதாக அந்நாட்டு அரசு கூறியுள்ளது.

<<<<<<>>>>>>

விளையாட்டுச் செய்திகள்

தெற்காசிய மகளிர் கூடைப்பந்து சாம்பியன் போட்டியின் இறுதியாட்டம் தற்போது புதுதில்லியில் நடைபெற்று வருகிறது.

இதில் இந்தியா - மாலத்தீவை எதிர்த்து ஆடி வருகிறது.

--------------

பெங்களூரு ஓபன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ராம்குமார் ராமநாதன் - சாகேத் மைனேனி இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.
ஆடவர் இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்த இணை 6-3, 7-6 என்ற செட் கணக்கில், இத்தாலியின் **Jacopo Berrettini – Enrico Dalla Valle** இணையை வென்றது.

------------

அகமதாபாதில் நடைபெற்றுவரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் அங்கிதா ரெய்னா காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.
மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், 6-3, 6-4 என்ற செட் கணக்கில் ஜப்பானின் **‘Funa Kozaki ’** –ஐ வென்றார்.

------------

இலங்கை சர்வதேச சேலஞ்ச் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Deepshikha Singh** காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.
மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், 15-21, 21-14, 21-16 என்ற செட் கணக்கில், இந்தியாவின் **Devika Sihag**-வை வென்றார்.

----------------

மொனோக்காவில் நடைபெற்றுவரும் சர்வதேச செஸ் போட்டியின் ஆறாவது சுற்று முடிவில் இந்தியாவின் **Koneru Humpy** இரண்டாவது இடத்தில் உள்ளார்.

-----------------

உகாண்டா சர்வதேச ஜுனியர் பேட்மிண்டன் போட்டியில், இந்தியாவின் **Angad Muchhal, Gopinath** ஆகியோர் ஆடவர் ஒற்றையர் பிரிவிலும், சுரேந்தர் - கவியரசு இணை மற்றும் **Angad Muchhal – Sachin** இணை ஆடவர் இரட்டையர் பிரிவிலும், நந்தகுமார் - வினோத் பிந்து இணை கலப்பு இரட்டையர் பிரிவிலும் இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளனர்.

**<<<<<<END>>>>>>**